செ.கு.எண்: 203 நாள்: 23.11.2011

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 23.11.2011

தேனி மாவட்டத்தில் உள்ள **வைகை அணையிலிருந்து** மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள பூர்வீக பழைய பாசனப் பகுதிகளுக்கும், மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள பெரியாறு விரிவாக்கக் கால்வாய் பாசனப் பகுதிகளுக்கும் சாகுபடிக்காக தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடிமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள பூர்வீக பழைய பாசனப் பகுதிகளுக்கும், மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள பெரியாறு விரிவாக்கக் கால்வாய் பாசனப் பகுதிகளுக்கும் பாசனத்திற்காக வைகை அணையிலிருந்து **24.11.2011 முதல்** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் **1,74,357 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9